# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 125/2013**

DEPOSITION OF WITNESS : P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2019

முதல் விசாரணை:

நான் தற்போது கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். வீராச்சாமி மற்றும் எதிரிகளை தெரியும். 16.02.2013 அன்று மதியம் 3 மணியளவில் ஊருக்கு வடக்கு பக்கமுள்ள எங்களுக்கு சொந்தமான இடத்தை வழக்கு சம்பந்தமாக பார்க்க சென்றுவிட்டு திரும்ப வரும்போது சுப்பையா மற்றும் தங்கராசு வீட்டு முன்பு நானும் எனது அண்ணன் மற்றும் வழக்கறிஞர் வந்து கொண்டிருந்தபோது வீராச்சாமி, சின்னராவுத்தர், பெத்தகம்மாள், சரஸ்வதி ஆகியோர் நீங்கள் ஏன் அந்த இடத்தை பார்க்க சென்றீர்கள் என்று கேட்டு வீராச்சாமி அண்ணன் தங்கபாண்டியை காலால் எத்திவிட்டார். அண்ணன் கீழே விழுந்தவுடன் சின்னராவுத்தர் கம்பால் தலையில் அடித்துவிட்டார், அதனால் ரத்தக்காயம் ஏற்பட்டது. விலக்கச் சென்றபோது என்னை சின்னராவுத்தர், பெத்தகம்மாள், மணி ஆகியோர் கம்பு, செருப்பு வைத்து நெஞ்சு மற்றும் முதுகுப்புறம் அடித்தார்கள். சண்டையை பார்த்த முக்குடுசாமி, பூசாரிஜக்கையன் ஆகியோர் விலக்கிவிட்டனர். அதன் சிகிச்சைக்கு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

2வது எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Dt.:                    Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No.125/2013**

DEPOSITION OF WITNESS : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : முக்குடுசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2019

முதல் விசாரணை:

நான் தற்போது கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1யைத் தெரியும். எதிரிகளை தெரியும். 3 வருடத்திற்கு முன்பு மதியத்திற்கு பிறகு முத்தாலம்மன்கோவில் முன்புள்ள மந்தையின் அருகே நான் மற்றும் பலர் நின்றிருந்தோம். செல்வராஜ், தங்கப்பாண்டி இடப்பிரச்சனை என்று வழக்கறிஞருடன் வந்தார்கள். அவர்களுக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்த சத்தம் கேட்டு சென்றோம். வீராச்சாமி, ராவுத்தயா, மணியம்மாளும் பெத்தகம்மாள் வந்தார்கள். மணியம்மாளும், பெத்தகம்மாள் ஆகியோர் தங்கராசை செருப்பால் முதுகுக்குப் பின்னால் அடித்துக் கொண்டிருந்தார்கள். தங்கபாண்டி அந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார். என்னவென்று அவரிடம் கேட்டபோது சின்னராவுத்தையா கம்பை வைத்து தலையில் அடித்ததாக சொன்னார். அதன்பின் நான் மற்றும் ஊரில் இருந்தவர்கள் விலக்கிவிட்டோம். அதன் பின் காவல் நிலையம் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

2வது எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 125/2013**

DEPOSITION OF WITNESS : P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : பவுன்ராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2019

முதல் விசாரணை:

நான் தற்போது கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். 5 வருடத்திற்கு முன்பு க.விலக்கு போலீசார் காலை 9 மணியளவில் சம்பவ நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நானும் வேலுச்சாமியும் கையொப்பம் செய்தோம். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

2வது எதிரி ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.